செ.வெ.எண் : 49 / ஆகஸ்ட்                                                                                    நாள் : 24.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

# அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள அங்கன்வாடிப் பணியாளர், குறு அங்கன்வாடிப் பணியாளர், அங்கன்வாடி உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் 28.08.2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள அங்கன்வாடிப் பணியாளர் , குறு அங்கன்வாடிப் பணியாளர் , அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்கள் தகுதியின் அடிப்படையில் நேர்முகத் தேர்வு நடத்தி இனச்சுழற்சி முறையில் நேரடி நியமனம் செய்ய விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களில் 24.08.2017ஆம் தேதிக்குள் அளிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது இதற்கான கால அவகாசம் 28.08.2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

எனவே விண்ணப்பம் செய்ய தகுதியுள்ள பெண்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இணையதளமான www.icds.tn.gov.in இலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்தோ, வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களில் விண்ணப்ப நகல் பெற்றோ, விண்ணப்ப படிவத்துடன் கல்விச்சான்று, வயதுச்சான்று, சாதிச்சான்று, இருப்பிடசான்றிற்கான குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற விதவை, கணவனால் கைவிடப்பட்டவர் எனில் அதற்கான சான்றுகளுடன் சம்பந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் நேரில் 28.08.2017ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

28.08.2017ஆம் தேதிக்கு மேல் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தகுதியின் அடிப்படையில் ஏற்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதம் அனுப்பப்படும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**